தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௪	திருவள்ளுவர் ஆண்டு க௯௭க சருவதாரி—ஆனி 1948—ஜூன்	மலர் ௩

பொழிற்றெண்டர் கருத்துரைகள்.

துயரம்.

திருவாளர் ந. ப. இராமசாமி பிள்ளை அவர்கள், சருவதாரி, ஆவணி அ-ஆம் நாள் (23–8–48) திங்கட் கிழமை சென்னையில் தம் இல்லில் உலக வாழ்வு நீத்தது தெரிந்து நம் சங்கத்தார் பெருந்துய ருழந்தனர்.

திரு பிள்ளை யவர்கள் தென்மொழி வடமொழிகளிற் சிறந்த அறிவு பெற்றவர்கள். எளிய நிலையிலிருந்து தம் முயற்சியினாலேயே பெரும்பேற்று நிலை யுற்றவர்கள். இந் நிலையுறினும் தம் நன்னிலை திரியாத் திறமையாளர். பாடல் பெற்றுப் பலர் மெச்ச வாழ்ந்தவர்கள். திருவொற்றியூர் இறையவனுக்கு அடிமைத்திறம் பூண்டு நற் பணி யாற்றித் தொடர்ந்தவர்கள். தமிழர்கள் ஆரிய வேதக் கருத்துக்களை அறிந்து தெளிதற் பொருட்டாக அவற்றைத் தமிழில் மொழி பெயர்த் துதவியவர்கள். திக்கற்றூர்க்குத் தங்கிடமும், உடம்புருக்கி நோய் மருத்துவசாலையும், கருவுயிர்ப் பார் கூடமும் பின்னும் பல மக்கட்கு நலம் பயக்கும் பல வசதிகளும் செய்து மகிழ்ந்தவர்கள்.

எவற்றினும் மேலாக நம் சங்கப் பணிகளைப் பாராட்டி அன்பு பூண்டு முதற் பகுதியாக ஓராயிரம் வெண்பொற்காசு உதவி மகிழ்ந்து இசை பெற்றவர்கள். பின்னும் வேண்டும் உதவிகளைப் புரிந்து களிக்க எண்ணியிருந்தவர்கள். சங்கத்தில் கலைக் கல்லூரி நிறுவுங்கால் அதற்கு வேண்டும் கட்டிடங்களைத் தம் செலவிலேயே அமைத்துதவ வாக்களித்து, அதற்காம் பொருளையும் சேமித்து வைத்திருந்தவர்கள்.

தமிழ் மொழிப் பற்றும், தமிழர் மேம்பாட்டிற் கருத்தும் கொண்டு விளங்கியவர்கள். இத்தகைய பெருந்தகையார் பிரிவு பொதுவாகத் தமிழர்கட்கும், சிறப்பாக நம் சங்கத்தார்க்கும் ஆருத்துயர் விளைப்பதாயிற்று. இறைவன் திருவருளை நினைந்து, திரு பிள்ளையவர்கள் உயிர் நலம் பெறவும், அவர்கள் திருமகனர் திரு ந. இராம. கண்ணனர் அவர்கட்கு ஆறுதல் அளிக்கவும் அத்திருவருளை வழுத்துகின்றேம்.

* * * * *

திரு. கு. இராமசாமி பிள்ளை அவர்கள் பிரிவு.

நம் சங்க உறுப்பினரும், சிறந்த அன்பினரும், கரந்தைப் பெருநிலக் கிழவரும் ஆகிய திரு. கு. இராமசாமி பிள்ளை அவர்கள், சருவதாரி, ஆவணி, உரு ஆம் நாள் (9—9—48) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் துடுமென உயிர் நீத்த செய்தி அறிந்து சங்கத்தார் பெருந்துயர் உற்றூர்கள்.

திரு பிள்ளை அவர்கள் தமிழவேள் அவர்கட்கு அணுக்கத் தொண்டரா யிருந்து தமிழன்பு பூண்டார்கள். சங்கப்பற்று மிகுந்து சங்க மேம்பாட்டுக்கான வழிகளெல்லாம் நினைந்து நினைந்து செயற்படுத்த முயன்றூர்கள். எம்மொடு நெருங்கிப் பழகி வேண்டும் போதெல்லாம் ஊக்க வுரை கூறித் தெருட்டியவர்கள். நற்பணி பலவற்றில் ஈடுபட்டவர்கள். இத்தகைய அன்பர் பிரிவு துயர் பெரிதும் தருகின்றது. திருவருளால் ஒருவாறு தேறி, அவர் தம் பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறுகின்றேம்.

மகிழ்ச்சி.

நம் சங்க உறுப்பினர் திருவாளர் பேரறிஞர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகத் தேர்ந்து கொள்ளப்பெற்ற தறிந்து பேருவகை அடைகின்றோம். இது, சங்கத்திற்கும் தமிழுக்கும் எய்திய ஒரு பெருமையாகக் கருதி மகிழ் கின்றோம்.

திரு. செட்டியா ரவர்கள் இளமை தொட்டே தமிழன்பு மிக்கவராய்ப், பல துறையிலும் அறிவு மேம்பட்டவராய்த் தளரா ஊக்கமும் விடா முயற்சியு முடையவராய்த் திகழ்ந் தமையே இவர்கள் இத்தகைய பெரும் பதவிக ளெல்லாம் பெறுவதற்குச் சிறந்த பொருட்டாகும்.

திரு. செட்டியா ரவர்கள் சிறந்த கட்டுரைகள் எழுதி நம் தமிழ்ப் பொழிலை அழகு செய்பவர்கள்.

வினைத் திட்பமும், நேர்மையாக வினை செயல்வகையும், தமிழ்த்தா யன்பும், பல்வகைப் புலமையும் நிரம்பியுள்ள திரு. செட்டியா ரவர்கள் மேன்மேலும் சிறந்த பதவிகளை ஏற்றுத் திறம்படப் பணியாற்றித் திகழ்வார்கள் என்பது எம் கருத்தும் விருப்பமும் ஆகும்.

இவர்கள் திறமைகளைப் பாராட்டி எம் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதுடன் இவர்கள் எவ்வகை நலன்களும் பெற்று மேன்மையாக நீடூழி வாழ வேண்டித் திருவருளை வழுத்து கின்றோம்.

நன்றியுரை.

நம் சங்கத் தலைவர் அவர்கள் சங்கத்திற்குப் பெரும் பொருள் திரட்டிச் சேமிக்கும் குறிப்புடன் வெளியிட்டுள்ள வேண்டுகோளை நம் பொழிலிற் கண்டவுடனே செந்தமிழ்ச் செல்வர் கோத்தமங்கலம் திருவாளர் தே. பழ. சித. சதாசிவச் செட்டியா ரவர்கள் நூறு வெண்பொற் காசு அனுப்பியருளினார்கள். இவர்களது செந்தமிழ்ப் பற்றும், கொடைத் திறமும் பெரிதும் பாராட்டற் குரியனவாம்.

தமிழ் மக்க ளெல்லாரும் இப் பெரியார் காட்டிய வழியைக் கடைப்பிடித்து உதவி யருளுவார்க ளாயின் நாம் எண்ணிய தொகை எண்ணியாங்கு விரைவில் சேர்ந்து, எண்ணிய கருமங்கள் விரைவில் நிறைவுறும்.

பின்னும் உதவியுள்ள அன்பர்கள் விவரங்களைக் கீழே குறிக்கின்றோம்.

க. திரு. A. M. G. முத்து வைத்தியலிங்கம் செட்டியார் அவர்கள், நாகப்பட்டினம் ரூ. 50

உ. ,, இராம. சு. இராம. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், மஞ்சட்கொல்லை, நாகப்பட்டினம். ரூ. 100

ங. ,, R. பிச்சை முதலியார் அவர்கள், மஞ்சட்கொல்லை ரூ. 100

ச. ,, தீ. மு. அரு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள், மஞ்சட்கொல்லை ரூ. 50

ரு. ,, A. M. மருதப்ப தியாகராசச் செட்டியார் அவர்கள், நாகப்பட்டினம் ரூ. 100

சு. ,, T. K. திருஞானம் பிள்ளை அவர்கள், வல்லம் ரூ. 101

திருவாளர் திருஞானம் பிள்ளை அவர்கள் அணித்தில் சங்கத்திற்குப் பெருந் தொகை உதவுவதாகவும், அதற்கு முன்பணமாகவே இந்த நூற்றொரு வெண் பொற்காசு தருவதாகவும் கூறியது எமக்கு உவகையும் ஊக்கமும் தருகின்றது.

நம் சங்கத்துப் பழந் தொண்டர் திருவாளர் வே. கோவிந்தசாமி நாயடு அவர்கள் திரு மகனார் திரு. கோ. வேங்கடராம நாயடு அவர்கள் தம் தம்பி திருமணத்தின்போது சங்கத்திற்குச் சிறப்புக் கொடையாகப் பதினைந்து வெண்பொற் காசு அளித்தமையைப் பாராட்டி, எம் நன்றி கூறி, மணமக்களை வாழ்த்துகின்றோம்.

உள நூல்

வித்துவான், திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

(முற்றொடர்ச்சி: துணர் 24, மலர் 2, பக்கம் 64.)

மன அடக்கம்

அடக்கமும் அமைதியும், உற்று நோக்கின், வேறுவேறாகும் என்பது தெரியவரும். மனம் வெகு வேகமாகச் செல்லும் தன்மையது. இத் தன்மையி லுள்ள மனத்தை அடக்கி யாளலே சிறப்பாகக் காணப்படுவது. நீராவியின் ஆற்றலை அடக்கிக் குறித்த இடத்திற் செலுத்துவதால், பெரும் பய னடைதல் போல, மன வாற்றலைச் சிதற விடாமல் பெரும்பயன் விளைக்கும் நல்வழியிற் செலுத்தவும், பிறர் குற்றம் கண்டு சீற்ற மின்றி யிருக்கவும் பழக்கஞ் செய்தலே மன அடக்கம் ஆகும். முதலில் மனதைச் சிறிது சிறிதாகப் பழக்கிக்கொண்டு வரின், பின்னர் அமைதியின் தன்மை அடைதலும் கூடும். வள்ளுவர் அடக்க முடைமை என்ற அதிகாரத்தில் முன்னர்ப் பொதுவாக அடக்கத்தின் பெருமையையும், முதலில் மெய் யடக்கத்தையும், இரண்டாவதாக மொழி யடக்கத்தையும் கூறி, ஈற்றில் மன வடக்கத்தையும் கூறினர்.

'கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கு மாற்றி னுழைந்து.'

மனத்தின்கண் கோபம் வராமற் பாதுகாக்கும் மன வடக்கம் உள்ளவனை அறந் தானே சென்றடையும் என்ற மேன்

மையினையும் மிளிர வைத்துள்ளார். இக் கருத்துப் பற்றியே,

> ‘நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
> வேர்த்து வெகுளார் விழுமியோர்’

என்றார் நாலடி யாசிரியர். ‘மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்’ என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார். மேற் கூறியவற்றால் மன வடக்கம் என்ன என்பதும், மன அடக்கம் உடையானை அறம் தானே அடையும் என்பதும், மன வடக்கத்தின் ஆற்றல் வேண்டிய இடத்துச் சிறக்கச் செய்தலை விளக்கும் என்பதும் தெரிய வருகின்றன.

இவ் வுலகின்கண் கல்வி கேள்விகளிற் சிறந்தார் தம்மோடு கல்வி கேள்விகளிற் குறைந்தாரும் தம்மை ஒரு சேர வைத்து எண்ணுவர் என்று உலகியலில் எதிர்பார்ப்பதால், உயர்ந்தாரைக் குறைத்துக் கூறுவதனால் தன்னை உயர் வென்று கருதுவோரைக் கண்டு தன் மனத்தை அடக்குதல் இன்றியமையாத தாகும். இதனை,

> நெறியா லுணராது நீர்மையும் இன்றிச்
> சிறியார் எளியரால் என்று பெரியாரைத்
> தங்கணேர் வைத்துத் தகவல்ல கூறுதல்
> திங்களை நாய்குரைத் தற்று.

என முன்றுறையரையனார் பழமொழி யாகிய பொன்மொழி ஒன்றினால் மிளிரவைத்திருத்தலால் கண்டு தெளிக.

இவ் வடக்கம் போரிற் சென்று புறமுதுகு காட்டாது போரிடுங்கால் கூடாது என்பர் சிலர். அவ்விடத்தும் உரிய தலைவன் ஆணைப்படி மனத்தை யடக்கிப், பகைப் படை வந்த இடத்துத் தன் முழு ஆற்றலுடன் எதிர்த்தலே சாலச் சிறந்தது. ஆகையால், அவ் விடத்தும் அடக்கம் வேண்டுமெனக் கொள்க.

இதுகாறுங் கூறியவற்றால் அடக்கத்திற்கும், அமைதிக்கும் வேறுபாடு உண்டு என்பதும், மன அடக்கத்தின் இலக்கணம் இன்ன தென்பதும், இவ் வடக்க முடையானின் சிறப்பு இது வென்பதும், இன்றியமையா வடக்கம் பெரியோர்களைச் சிறியோர் தமக்குச் சமமாக எண்ணித் தகவல்ல கூறிய இடத்து வேண்டப்படுவ தொன்றாகும் என்பதும் போந்த பொருள்களாகக் கொள்க.

அமைதியின் மேன்மை

மன வமைதி யாவர்க்கும் வருவ தன்று. பொருள்களின் தன்மையை உள்ளவா றறிந்து உண்மையாய் நடப்பவருக்கே வருவ தொரு குண மாம்.

உயர் நட்பின் பழக்கத்தாலும் ஒரோ வமயங் கைகூடுவ துண்டு. சொற்களின் தன்மையை யாராயாமல் வாய்க்கு வந்தபடி பேசுவோர் இரைந்து பேசுவதையும், மிகுந்த நுட்ப முடையார் மெல்ல அமைதியாகச் சில சொற்களால் தெளிவாக விளக்குவதையும் இயற்கையாய் இவ் வுலகின்கண் காணல் நேர் காட்சியேயாம்.

இவ் வமைதியாய் மனம் இருந்து பழகின் இதைவிட இன்பம் பயக்கும் பொருள் இவ்வுலகினுள் உண்டா என்று ஐய மின்றி நினைப்பார். அமைதி என்ற பெயரால் சோர்ந்து தூங்குவதோ, மன வாற்ற லின்மையோ குறிக்க லாகா. எண்ணும் ஆற்றல் இருந்தாலும் தெளிவுடன் ஆறுதலாய் மனம் இருத்தற்கே மன வமைதி என்று கூறப்படும்.

இவ் வமைதியினைத் தான்

'போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து'

என்ற பொன்மொழி யாகிய நன் மொழியால் வரைந்துள்ளார்கள். நன் முயற்சிக்கு இடையூறாக இம் மொழியை

உபயோகித்துக் கெடுத்துவிட லாகாது. உள்ளத்தா லுழைத்து, உழைப்பின் மிகுதியால் மனங் கலங்கினுல் பயனே மாறிவிடும். ஆகையால், முழு முயற்சி செய்து கலங்காமல் அமைதியாய்ப் பழக வேண்டு மென்பதே அமைதியின் இலக்கண மாகும். நினைப்பின் முயற்சி யின்றி இம் மொழியை உபயோகிப்போர் சோம்பித் திரிவோ ராவர். இவ் வமைதியினைத் தான் 'யாண்டு பலவாக' என்று தொடங்கும் புறநானூற்றுச் செய்யுளில் 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்று விளங்க வைத்துள்ளார்.

விசால மான ஆராய்ச்சியின் காரணமாகத்தான் அடங் கிய கொள்கை யாகிய அமைதி உண்டாகும். இவ் வமை தியே நிலைத்திருக்கும் பெற்றி உடைத்து, இவ் வமை தியின் மேன்மையாலேயே அரிய பொருளின் இயல்பைக் காண வழி யுண்டாகும். இவ் வழியை விரும்பியார்க்கு உலகில் இன்பம் இடையறாது சுரக்கும் என்பது கூறவும் வேண்டுமோ? ஆனுல், அமைதியான பண்புடன் பல்காற் பழகின் அல்லது அதன் அருமை எவ்வளவு எவ்விதம் கூறி னுலும் (பார்க்கமுடியாது) உணர முடியாத நிலையாய் உள்ளது. அனுபவ முடையார்க்கு அமிழ்தமாய்த் தோன் றும் என்பது துய்த்தார்க்குத்தான் விளங்கும்.

இதுகாறும் கூறியவற்ருல், அமைதி என்பது யாது என்பதும், யாவராலும் அதனை உணர முடியாது என் பதும், அனுபவ முடையார்க்கு இன்பம் பயப்பதைத் தானே எளிதில் துய்த்து அறிவார்கள் என்பதும், அமை தியை நாடினுர் படித்த அனுபவ முடையாரோடு சேர்ந்து பழகின் வரும் என்பதும் கூறிய பொருள்களாகக் கொள்க.

திருக்குறள்

பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர் : கொக்குவில் திரு. வ. பொன்னையா, B.A. (Hons), Ph.D.

(முற்றொடர்ச்சி: துணர் 24, மலர் 2, பக்கம் 62.)

கூடா வொழுக்கம்

6. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

இ-ள். வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம்—பிறரை மயக்குதலும் வஞ்சிப்பது மாகிய கொடுமையோடு கூடிய மனத்தை யுடையானது மறையொடுபட்ட ஒழுக்க மாகிய கூடா வொழுக்கத்தை; பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்—உடம்பாய் நின்று அவன் வினையைத் தொலைத்து வீடுபே றடைவிக்கத் துணை புரிந்து நின்ற பூதங்கள் ஐந்தும் கண்டு தம் அகத்தின்கண்ணே நகும். ஆகலான் தவஞ் செய்வா னுவான் கூடா வொழுக்கத்தைத் தவிர்க. எ-று.

வஞ்ச மனத்தான், படிற்றொழுக்கம் என்பன மூன்ற னுருபும் பயனு முடன்றொக்க தொகைகள். மனத்தான் உடைப்பெயர். உம்மை முற்றும்மை. ஏகாரம் தேற்றம். 'பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்' என்றது, உணர் வில்லதை உணர் வுள்ளது போலவும், உறுப் பில்லதை யுறுப் புள்ளது போலவும் ஏற்றிச்சொல்லும் வழக்குப்பற்றி யெழுந்த தென்க. இதனை, 'வாரா மரபின வரக் கூறுதலும்' என்றற் றொடக்கத்துச் சூத்திரத்து, 'உறுப்புடையதுபோல் உணர்வுடையது போல்' என்பதனல் அமைத்தல் சாலாதோ வெனின், இச் சூத்திரம் தலைவர் தலைவியர்க் குரிய பக்கச்சொல் பற்றி எழுந் தமையானும், அங்ஙன மன்றி இவ் வெண்பா ஆசிரியர் கூற்றாகலானும் அவ்வா றமைத்தல் ஆகா தென்க.

பிறரைத் துன்ப நிலையுட் புகுத்தி, அதனால் தனக்குப் பாவம் ஆக்கிக் கொள்வான் என்பது தோன்ற வஞ்ச மனத்தான் என்றும், பிற ரறியத் தவத்தான் மாண்ட தன்மை காட்டியும் அவர் அறியாமை வைத்துக் கூடா வொழுக்கஞ் செய்தும் நிற்பா னென்பது கருதிப் படிற்றொழுக்கம் என்றும் கூறினா ரென்க.

இனி, அநாதியே ஆணவ மலத்தாற் கட்டுண்டு பாடாணம் போற் கிடந்த வுயிர் மாயையின் காரியங்களாகிய கரணங் களுடன் சேர்ந்து மலஞ் சிறிது நீங்கப்பெற்று அறிவு விளங் கிப் புண்ணிய பாவங்களைச் செய்து அவற்றை நுகர்தற் கேற்ற பல பிறவிகளை யெடுத்தெடுத்து உழிதரும் வேளை, ஒருகால் தான் என்றுகொண்ட இன்ப துன்பங்கள் எல்லாம் நிலை யில வெனக் காணும். காண அவற்றை நீக்கும் பொருட்டு ஞானாசிரியனை நாடித் தீக்கைப் பேறும் ஞான சாதனப் பேறும் ஒருங் செய்தித் தவத்தின்கண் நிற்கும். அவ்வாறு நின்ற உயிர்க்கு மேலைக்கு வித்தாய சஞ்சித வினை முன்னரே தீக்கைப் பேற்றினால் எரி சேர்ந்த வித்துப் போலக் கெட் டொழிந்து கிடக்கவும், பிராரத்த வினை ஐம் பூதங்களா லாய உடலைப் பற்றிநின்று நுகர்ச்சி வயத்தான் உட லூழாய் ஒழிந்து நிற்கவும், ஞானம் விளங்கி ஞேயங் காட்சிப்படும். அங்ஙனம் காட்சி யெய்திய வுயிர், வேம்பு தின்ற புழு கரும் பினிற் றலைப்பட்டு அதன் சுவை யறிந்த போதினும், பயிற்சி வயத்தான் அவ் வேம்பை நாடி நிற்பது போல, பிராரத்த நுகர்ச்சிக்கண் மறித்தும் ஆகாமிய வினையைச் செய்ய, அப் பிராரத்தத்தைத் துய்க்கச் செய்து பாச வீடு உதவ உடலாய் நின்ற ஐம் பூதங்களும் அவ் வுயிரின் மடமை பொருளாக நகுதலைச் செய்யும் என்று கூறியவா றாயிற்று.

ஈண்டு மடமை என்பது சிவசக்தி கொளுத்தக் கொண்டும் பயிற்சி வயத்தான் தான் கொண்டது விடாமை. ஒரு பிறப்பில் ஈட்டப்படும் வினை ஆகாமியம் என்றும், அவ் வினை நீட்டித்துப் பயன் றருவதற் கேதுவாய்ச் சூக்கும

மாய் நின்ற நிலை சஞ்சித வினை யென்றும், பின்னர் அது பயன் படுதற் கேது வாயவழி பிராரத்த வினை யென்றும் பெயர் பெறு மென வறிக.

இனி, யாம் இவனுக்குப் பாசவீடு நிகழத் துணை செய்து கொண்டு இவனையும் இவன் ஒழுக்கத்தினையுங் கண்ணுற்று நிற்பவும், தன் கூடாவொழுக்கத்தைப் பிற ரறியா ரெனக் கருதினனே! இவன் அறிவென்னே! என உடலாய் நின்ற ஐம் பூதங்களும் அவனது பேதைமை பொருளாக நகும் என்று கூறினும் அமையு மென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர் உரைவிளக்கஞ் செய்யுழி, 'இக் குற்றம் மறையா தாகலின் அவ் வொழுக்கம் ஆகா தென்பது கருத்து' என்றார்.

பூதங்க ளைந்தும் சான் றென்பது பற்றிக் குற்றம் மறையா தெனல் ஏற்றிச் சொல்லும் வழக் காதலின், இதுவே ஏதுவாகக் கூடாவொழுக்கம் ஆகா தென்று முடித்தல் ஏதுப் போலியானு முடித்த லாகும். ஆகலான், அழகியார் உரை விளக்கத்தில் வழீஇயின ரென்க.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின்: கூடா வொழுக்கம் தவஞ் செய்பவனின் மடமை காரணமாக வேனும் பேதைமை காரணமாக வேனும் நிகழு மாகலான், அதனை அன்னான் தவிர்க எ-து.

7. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்

இ-ள். நெஞ்சின் துறவார்—நெஞ்சால் விடயப் பற் றறாத வராய்; துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்—பற்றற்றார் போல நடித்துக் காட்டிப் பிறரை வஞ்சித்து வாழ்வா ராகிய கூடாவொழுக்கத்தின் நிற்பவரி னுங்குக் கொடுமை உடையார் உலகத் தில்லை; ஆகலான், தவஞ் செய்வா னவான் அவ் வகைக் கூடாவொழுக்கத்தைத் தவிர்க. எ-று.

நெஞ்சின் என்பதில் ஐந்த னுருபு காரகவேதுப் பொருண் மையில் வந்தது. துறவார் என்பது வினை யெச்சப் பொருள் தந்து நின்ற வினைமுற்றுத் திரிசொல். அதனை வாழ்வார் என்பதன்கண் ணுள்ள வாழ்தல் என்னும் வினையொடு முடிக்க. வாழ்வாரின் என்பதில் இன் னுருபு உறழ் பொரு வுப் பொருளது. வன்கணர் பண்பு கொள் பெயர்.

ஒருவனுக்கு விடயப் பற் றறுமை யென்பது நிலைபில வாகிய இன்ப துன்பங்களைப் பயக்கும் பிறப் பிறப்புக்களைக் கொடுத்து வீடுபே ருகிய பயனைத் தடுத்துநின்று அவனைத் துன்ப நிலையுட் படுத்துதற் காரணத்தான் வரும் பாவமும், அவன் தன தாக்கிக் கொண்ட விடயத்தைப் பிறர் தம தாக் கிக் கோடல் கூடாமை செய்து அவரைத் துன்ப நிலையுட் புகுத்துதற் காரணத்தான் வரும் பாவமும் ஆகிய இரு வகைப் பாவத்தையும் உண்டாக்கு மென்றும், இனி முன் றுறவாமை பற்றி இவ் விரு வகைப் பாவமும் ஒருங் கெய்தி நின்ற ருனவான் பின் பற்றற்ருர் தன்மை காட்டிப் பிறரை மயக்கி வஞ்சித்து நிற்பின் இதனன் வரும் பாவத்தினையும் எய்தி நிற்ப, இம் மூ வகைப் பாவமும் நெஞ்சிற் றுறவாது துறந்தார் போல் வஞ் சித்து வாழுமவனுக்கு உண் டென்று கூறியவா ருயிற்று.

இனிப், பிற ரெல்லாம் துறவாமை காரணமாக இரு வகைப் பாவமே எய்திநிற்ப, இவன் துறவாமை துறந்தார் போறல் என்னும் இரு காரணங்களானு மாய மூ வகைப் பாவமும் எய்தி நிற்பர னுகையான், இவனி னூங்குக் கொடுமை செய்வா ராவார் உலகத் தில்லை யென்று உறழ் பொருவுப் பொருளிற் கூறிக் காண்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர் ' நெஞ்சாற் பற் றறுது வைத்துப் பற் ருற்ருர் போன்று தானஞ் செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல் வன்கண்மையை யுடையார் உலகத் தில்லை ' என்னும் உரையையும், ' தானஞ் செய்வாரை வஞ்சித்த லாவது யாம் மறுமைக்கட் டேவ ராதற் பொருட்டு

இவ் வருந் தவர்க்கு இன்ன தீது மென்று அறியா தீந்தாரை அதுகொண்டு இழி பிறப்பின ராக்குதல், தமக்கு ஆவன செய்தார்க்கு ஆகாதன விளைத்தலின் வன்கணாரில் லென்றார்' என்னும் உரைவிளக்கத்தையும் தந்தனர்.

ஈவா ரெல்லாரும் தாம் மறுமைக்கட் டேவ ராதற் பொருட்டுத் தானஞ் செய்வா ரென்பது மறுக்கப்படுதல் பற்றி அவருள் சிலரே அப்பொருட்டுத் தானஞ் செய்வாராக, அச் சிலர்தானும் இவ் வருந்தவர்க்கு உண்டி, உறையுள், மருந் தென்னும் இம் மூன்ற னுள்ளும் இன்ன தீது மென்று அறியா தீந்த காரணத்தானே அவர்க்கு வரும் குற்றம் கழுவப்படு மாகையானும், இக் கழுவப்படுங் குற்றந் தானும் எற்றார் ஆகியும் துறந்தார் போல் வஞ்சித்து வாழுமவரைத் துன்பத் துட் புகுத்துதல் உடமைபற்றி வஞ்சித்து வாழுமதனால் அவர் எய்திநின்ற துன்பத்தைக் கடலிடைக் குளித்து நனைந்து நின்றான்மேல் ஒருகை நீர் தெளித்தல் நனையாதவாறு போன்று ஓரெள்ளிடைதானும் கூட்டா தாகலானும், இத் தகைத் துன்பத்தை வஞ்சிப்பார் மாட்டுச் செய்யுங் குற்றத் தானே தானஞ் செய்வா ராவார் இழி பிறப்பின ராவ ரென் பது உபசாரக் கூற் றாவ தன்றி உண்மைக் கூற் றல்ல வென் பது பெறப்படும். ஆகையான், இவ் வுபசாரக் கூற் றாகிய இழி பிறப்பின ராக்குதற் காரணத்தான் தானஞ் செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல் வன்கணார் உலகத்தில் இல்லை என்று ஆசிரியர் கருதா ரென்பதுவே யேதுவாக அழகியார் உரை உரை யன்மை அறிக.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின், பற் றாறுது வைத்துப் பற் றற்றார் தன்மை காட்டி நின்று கூடாவொழுக் கத்திற் செல்லுதலினும் கொடுமை பிறி தில்லை யாகலான், அத் தகைக் கூடாவொழுக்கத்தைத் தவஞ் செய்வா னுவான் தவிர்க எ—து.

8\. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

இ-ள். பற்று அற்றேம் என்பார் படிற் றொழுக்கம—தம் மைப் பிறர் தவத்தான் மாண்டா ரென்று மதித்தற் பொருட்டு

எடுத் தெடுத்துக் களைத்ததன் பின்னரே யாகலானும், பல பிறப்புக்களுக்குப் பின் வரும் இரங்க லாகிய துன்பம்பற்றிக் கூடாவொழுக்கத்திற்குப் பெரியதோர் இழுக் கென்று கருதி ஆசிரியர் இப் பாட்டைத் தரா ரென்பதே ஏதுவாக அழகியா ருரை உரை யன்மை காண்க.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின், துன்பத்தி னீங்கித் தவ முதிர்ச்சி யடைய விரும்பின், தவஞ் செய்வா னவான் கூடாவொழுக்கத்தைத் தவிர்க எ-து.

9. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

இ-ள். உலகம் பழித்தது ஒழித்து விடின்—அறிவுடையோர் தவத்தொடு பொருந்தா தென்று குற்றங் கூறிய கூடாவொழுக்கத்தைத் தவஞ் செய்வா ராவார் அகத்தாற் கடிந்து விடுவா ராயின், மழித்தலும் நீட்டலும் வேண்டா—அவர்க்கு உலகம் குற்றம் பொருத தலைமயிரை மழித்தலா லாய வேட மேனும் அதனைச் சடையாக்கலா லாகிய வேடமேனும் வேண்டா, ஆகலான் அன்னார் கூடா வொழுக்கத்தைத் தவிர்க எ-று.

மழித்தல் நீட்டல் என்பன அவற்றா னாய வேடங்களைக் குறித்து நின்றமையின் காரண வாகுபெயர். உம்மை எண்ணும்மை. அது தொகை பெறாது நின்றதை 'உம்மை யெண்ணு மெனவெ னெண்ணுந், தம் வயிற் றொகுதி கடப்பா டிலவே' என்னுஞ் சூத்திரத்தா னமைக்க. பழித்தது என்றது கூடாவொழுக்கத்தை.

பெற்றி முதலாயினவற்றால் கூடா வொழுக்கமானது தவத்தொடு பொருந்தா தென்று தெளிந்து அறிவுடையோர் பலரும் தாம் தாம் இயற்றிய நூல்களில் அதனைப் பழித்துக் கூறியிருப்ப, தவஞ் செய்வா ராவார் அவ்வக் நூல்களைக் கற்று அவற்றா னாய தெளிவாலேனும், பொருந்துமாற்றா லேனும் தாமும் அதனை அவ்வாறே கண்டு அகத்தாற் கடிவா ராயின், அவர்க்குத் தலை மயிரை மழித்தல், சடை யாக்கல் என்னும் இரு தொழில்களாலும் வரும் வேடங்களும் வேண்டா வென்று கூறியவா றாயிற்று.

(தொடரும்.)